(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (ஹௌஸ் கமிட்டி) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 13—3—1970 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 14—3—1970 சனிக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 16—3—1970 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதிமூன்றிற்கு மேற்படுமாயின் 23—3—1970 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/70).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று நான் கோருகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாமீது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதாவை எவ்வளவு நேரத்தில் முடிப்பது?

திரு. பி. ஜி. கருத்திருமன்: பேசி முடிக்கிறவரையில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு மசோதாவும் இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: 12½ மணி வரையில் இதற்கு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

TRUTH ALONE TRIUMPHS